திரு. எஸ். வடிவேல்: தரங்கம்பாடி கோட்டை பழங்கால கோட்டை. அங்கே வெளிநாட்டவர்களும், வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களும் தங்குவதற்கு வசதியாக அதை அரசு சீரமைப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கோட்டையினை விரிவு படுத்திடும் செயற்குறிப்பு உள்ளதா என்பதுதான் கேள்வி, அதுதான் இல்லை என்று குறிப்பிட்டேன். தரங்கம்பாடி கோட்டை இதுவரையிலும் மத்திய அரசின் பாதுகாப்பில் இருந்து வந்தது. இப்பொழுது அதைத் தமிழக தொல் பொருள் ஆராய்ச்சி துறையின்கீழ் வைப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதை மேற்கொண்டிருக்கிறோம். பழைய காலத்துப் பொருள்களை பாதுகாப்பதற்கு தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொண்டிருக்கிறது. விரிவுபடுத்துவதற்கான திட்டம் அல்ல. பாதுகாத்து, பழங்கால சின்னங்களை பாதுகாக்கின்ற முறையில் அதைப் பாதுகாப்பதற்கும், அதனைப் பழுது பார்ப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தரங்கம்பாடி என்ற பெயருக்குப் பொருள் அலைகள் பாடுகின்ற ஊர் என்பது. அதை டிராங்குபார் என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். டிரிப்ளிகேன் என்பதை தமிழில் திருவல்லிக்கேணி என்று கூறுவது போல், ஆங்கிலத்தில் எழுதும்பொழுது கூட டிராங்குபார் என்று எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதும்பொழுதும் தமிழில் எழுதுவதுபோல் திருவல்லிக்கேணி என்று கூறும் வகையில், அம்மாதிரி பெயர்களை தமிழிலே எழுதுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தரங்கம்பாடி என்று நான் எழுதி வருகிறேன். சிலபல இடங்களில், இப்படிக் கொஞ்சநேன். டிராங்குபார் என்று எழுதுவதை மெல்ல மெல்ல மாற்றிக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. காலப் போக்கில் இதையும் மாற்றிக்கொள்ளலாம்.

Mortuary van in General Hospital, Madras

* 419 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Mortuary vans are available in the Madras General Hospital; and

(*b*) if not, the action taken thereon?

1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தற்பொழுது உள்ள சவ ஊர்தி பழுதடைந்துவிட்டதால் ஒரு புதிய சவ ஊர்தி வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப இதன் எண்ணிக்கையும் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இரண்டு ஊர்திகள் தேவை என்று கேட்கப்பட்டது. ஏப்ரல் 1973-ல் ஒரு ஊர்தியை அவசர நிலைமை காரணமாக வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த ஊர்தி கிடைக்கவில்லை. அதை விரைவாகத் தரவேண்டும் என்று அந்த நிறுவனத்தை மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் கேட்டிருக்கிறார். அது விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, வெளியூர்களிலே இருந்து பொது மருத்துவ மனைக்குச் சிகிச்சைப்பெற வந்து, இங்கே பலர் இறந்துவிடுகிறார்கள். அப்போது சவத்தை எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. பிரைவேட் டாக்சிக்கு அதிகமாகப் பணம் கேட்கிறார்கள். ஆகவே, சென்னை பொது மருத்துவ மனையில் அதிக எண்ணிக்கையில் 'ஏர் கண்டிஷன்ட் வான்ஸ்' வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அநேகமாக மருத்துவ மனைகளிலே உள்ள வான்கள் பெரும்பாலும் பழுதடைந்திருக்கின்றன. புதிய வான்களை வாங்குவது கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. உரிய காலத்தில் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் வலியுறுத்திப் பெற முயற்சி செய்யப்படுகிறது. ஆகவே, இதைவிட வசதியாக இப்போதிருக்கின்ற நிலையில் "ஏர்-கண்டிஷன்ட் வான்களை" வாங்குவது இயலாது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, தற்செயலாக மருத்துவ மனைகளிலிருந்து சவங்களை எடுத்துச் செல்ல, வான்கள் இல்லாமலிருந்தால், ஆம்புலன்ஸ் வான்களை சவ ஊர்திகளாக கன்வர்ட் செய்து, சவங்களை எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உயிரோடு இருப்பவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் ஆம்புலன்ஸ் வான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் இப்போது இருப்

பவை போதாது. ஆகவே, கன்வெர்ட் செய்வது என்பது இயலாது. பெரிய மருத்துவ மனைகளுக்கு 4, 5 என்ற அளவில் ஆம்புலன்ஸ் வான்கள் வாங்கவேண்டுமென்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே ஆலோசனை வழங்கப்பட்டது. வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆம்புலன்ஸ் வான்கள் எல்லா மாவட்ட மருத்துவ மனைகளுக்கும் கிடைக்கச் செய்யத் திட்டம் இருப்பதால், அதற்குப் பின்னால் யோசிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Not only in General Hospital but also in the Royapettah Hospital, there is absolute lack of mortuary vans and because of this, corpses have to wait for hours together or even for a day. Will the Government give topmost priority for purchase of at least two or three mortuary vans for each of the three hospitals in Madras City, viz., Royapettah, General and Royapuram hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் வருகிறவர்களில் பெரும்பாலோர் நல்ல சிகிச்சை பெற்றுத் திரும்புகிறார்கள். ஆகவே, ஒரு மருத்துவமனைக்கு இரண்டு வான் தேவை என்ற நிலைமை ஏற்படாது. ஒரு வண்டியாவது ஓடக்கூடிய நிலையில் இருக்கும்படி கவனிக்கப்படும்.

மேல்விஷாரத்தில் கோஷா பெண்களுக்கான மருத்துவமனை

* 420 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி மேல்விஷாரத்தில் கோஷா பெண்கள் ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, ராணிப்பேட்டை, மேல் விஷாரம் போன்ற இடங்களிலுள்ள பெண்கள் வேலூருக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட ஒரு தனி மருத்துவமனையை ஏற்படுத்த வசதி இல்லை என்றாலும், இருக்கின்ற மருத்துவ மனையை விரிவுபடுத்தி கோஷா பெண்களுக்கு என்று ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறதா ?